சார்பு நீதிமன்றம் மதுராந்தகம்

MCOP No. 20/2023

பெயர். திரு.தண்டபாணி நாள். 16.07.2026
த/பெ. சுந்தரம்

**<u>மனுதாரர் சா.1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு மனுதாரர் தரப்பில் முதல் நிலை விசாரணை தொடர்ச்சி</u>**

1. விபத்து சம்மந்தமான முதல் தகவல் அறிக்கை நகல் **ம.த.சா.ஆ.1.** மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி மருத்துவமனையில் வழங்கிய விடுவிப்புச் சான்றிதழ் அசல் **ம.த.சா.ஆ.2.** குமார் மருத்துவமனையில் வழங்கிய விடுவிப்புச் சான்றிதழ்களின் அசல் **ம.த.சா.ஆ.3 மற்றும் 4.** மருத்துவ செலவீன இரசீதுகள் **ம.த.சா.ஆ.5. எனக்கு எடுக்கப்பட்ட மின் கதிர்படம் ம.த.சா.ஆ.6.** என் ஆதார் அட்டை மற்றும் வங்கிக் கணக்குப் புத்தகத்தின் நகல்கள் **ம.த.சா.ஆ.7 மற்றும் 8.** மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**<u>2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

**<u>ஆரம்பித்த நேரம்: 12.43PM</u>**

2) நான் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டதால் கால தாமதமாக புகார் அளிக்கப்பட்டது. ம.த.சா.ஆ.1 ல் சாலையை கடக்கும் போது விபத்து ஏற்பட்டதாக குறிப்புள்ளது என்றால் சரிதான். நான் சாலையை கடப்பதற்காக அங்கு நின்று கொண்டிருந்தேன். நான் மேற்கே நின்று கொண்டிருந்தேன். எனக்கு

ஓட்டுநர் உரிமம் இல்லை. நான் பயணம் செய்த வாகனத்தின் பதிவு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் ஓட்டி சென்ற வாகனத்தின் பதிவெண் அரசு வாகனத்திற்கு தான் வழங்க இயலும் என்றால் சரியல்ல. என்னுடைய தொழில் மற்றும் வருமானத்தை என்பிக்க ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மனுவை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை– இல்லை.

**<u>குறுக்கு விசாரணை முடியும் நேரம்: 12.50PM</u>**